# ஓம்

# நினைவு மலர்

## அமரர் வைத்திய கலாநிதி நா.தி. சம்பந்தன்

## IN MEMORY OF

**LATE Dr. N.T. SAMPANTHAN,** M.B.B.S (CEYLON)
F.R.C.S (GLAS) F.R.C.S. (EDIN)

**DATE OF BIRTH:- 19.05.1916** **DEPARTED ON :- 02.08.1996**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பத்தினர்

| | | |
|---|---|---|
| மனைவி | – | சாரதா |
| மகன் | – | சுபாஸ் சந்திரன் |
| மருமகள் | – | ஜயந்தி |
| பேரப்பிள்ளைகள் | – | சுபாஷினி, கீதாஞ்சலி |
| | | |
| மகன் | – | நாகலிங்கம் |
| மருமகள் | – | ரோகினி |
| பேரப்பிள்ளை | – | சம்பந்தன் நிருத்தனன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## REFLECTIONS ON LATE DR. N. T. SAMPANTHAN

Late Dr. N. T. Sampanthan was born at Bidor, Malaysia on 19.05.1916. His family tree has deep roots at Valanthalai, Karainagar. Both his parents are natives of Karainagar. His father Mr. K. Nagalingam followed his brothers and went to Malysia in 1910 to seek employment. He took to plantation as his career and owned a rubber estate at Bidor. He married Ponnammah (Manikkam) Arunaslam, who was a close relative. They had six children, all married and settled as detailed below.

| Children | | Married to |
|---|---|---|
| 1. Sampanthan | - | Saratha Sampanthan |
| 2. Jayaseelan (deceased)<br>Deputy Director<br>Department of Agriculture- Sri Lanka. | - | Rukmani Suppaiah (deceased) |
| 3. Amarawathy | - | Muruhar Kathiravelu (deceased)<br>Malaysian Govt. Service |
| 4. Gnanakalai | - | Thillaiamblam Navaratnam(do)<br>Teacher,<br>Hindu College - Karainagar |
| 5. Sundarammah | - | Shunmugam Mahadeva(deceased)<br>Mahadeva Jewellers-Jaffna |
| 6. Pushpavathy | - | Suppaiah Sharvanandha<br>Rtd. Chief Justice-Sri Lanka |

Dr. Sampanthan had his primary education at Bidor and attended the under mentioned schools:

i. Holy Family Convent - Taiping
ii. St. George's School - Taiping

He came to Sri Lanka and joined St. Thomas College, Mount Lavinia. Young Sampanthan remained a hostel student and continued his life under the guardianship of his uncle late Mr. N. Nadarajah K. C, (who was elevated to the post of Pusine Justice). He completed his secondary education successfully and

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

entered the Medical Faculty in the University of Colombo. He worked as houseman at the Colombo General Hospital, and for a while at Kandy General Hospital. Then, to the surprise of all his relatives, guardians, friends and associates, he decided to abandon government service in 1944, ignoring the benefits and facilities that accrue to government officers. He decided to join the co-operative hospital at Moolai, to serve the residents of Jaffna, though he was aware that no doctor would ever make a decision to quit government service. In 1945, he married Miss. Saratha Shunmugam. They were blessed with two sons.

Having joined the Cooperative Hospital his attention was towards the upliftment of the hospital. He felt the need for a surgeon, hence he proceeded to the United Kingdom in 1947 to qualify as a surgeon at his own expense. Dr. Sampanthan obtained FRCS degree from the colleges of Edinburgh and Glasscow, within the shortest period possible and returned to Moolai to serve the society.

His patients were wondering, whether he would be available for general practice. To the surprise of all concerned, he continued his duties as physician, obstetrician, gynecologist and as a surgeon as well. His actions were spectacular, as he sacrificed his time and money for the benefit of the public, a very rare performance indeed.

Having contributed his best to the welfare of the hospital he remained as the chief administrator of the hospital, for nearly 30 years. he took care of all the staff in the hospital and made sure they were adequately provided to give good services to the community. This type of service he rendered was so unique, which usually could not be expected from all. He was simple and preferred a simple life.

With all genuine good services rendered and appreciated by all, fate did not extend its help, but tested by making him

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

to loose the sight of one eye. He did sought the best medical attention, at his expense by proceeding to the UK for treatment. After treatment the doctors revealed, that in time to come, the sight of the other eye too will get affected. What a destiny for the man who had rendered such service to all? He served up to the year 1975 at Moolai and decided to retire from active practice due to poor eye sight, against the objections to the people of Moolai.

After retirement, he was requested to render his services in a private medical clinic in Jaffna for limited hours. Even here, he could not continue for long due to deteriorating eye sight. He stayed at home incapacitated from 1983, but remained cheerful, reconciled and also adviced those who came for consultations.

In his incapacitated life at his house at 32, Palay Road, Kondavil he and his wife faced traumas of the civil commotion his dear brother Jayaseelan, his wife and son were killed, forced removal to refugee camps, destruction of their house and forced "exodus" to Thenmarachchi in October 1995. He did not show any signs of dejection, but had to seek assistance from ICRC to remove them both to Colombo to reside with their sons. They came to Colombo on the 10th of January 1996.

He narrated all miseries of life and experiences to those who visited him, with humour. Destiny, who knows what it had in store? Destined to pass away from this world, his kidneys failed, and in the presence of his beloved wife, sons, daughters-in-law, grand children and other close relatives, he departed peacefully at 6.48pm on 2nd August 1996.

The funeral took place on 4th August at Kanatte according to Hindu rites with a large gathering - an event which expressed that Sri Lanka had lost one of her finest sons and Jaffna has Lost one of her priceless Gem.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A DOCTOR FOR ALL SEASONS

In our environment, that is in the Sri Lankan context, a Doctor, especially a Consultant, enjoys not only a priviledged position, but also experiences a glamourisation of his Profession. Dr. N. T. Sampanthan, living up to the cultural traditions animating the society into which he was born, although, a fully qualified surgeon, having earned this qualifications in Sri Lanka and Great Britain, had spent his much valued Professional life in Jaffna, serving the people in simple but great style. His skills as a surgeon would have won him a glamourised career in the capital city of Colombo, where he would have flitted from hospital to hospital, much sought after, and earning money, and a niche for himself in a paltitudinous society. But he had an inate sense of feeling and being a man of true culture, reflecting the deeper values of life, decided to resign from the Government Service ignoring pension benefits, and took up his appointment at the Cooperative Hospital - Moolai, Chulipuram, (in the Vaddukkoddai electorate) and started to serve in that hospital both as a "Physician and Surgeon to the Peninsular folk of Jaffna. Jaffna residents will always remember him as a "Doctor of all seasons". He had practised Medicine and Surgery with patient kindness and many recovered from their various illnesses through his skill in healing .

Popularly called' Moolai Sampanthar', the man was a kind hearted Doctor with a smiling face at all times. His career would not have actualised, if not for his uncle Late Veluppillay Ramanathan of Survey Office, Singapore. Young Sampanthan, in his primary educational stage at Taiping in the Federated Malay States (then a Colony) found that the he was weak in arithmetic, and was not keeping up to the standard in that subject, and therefore was being pulled up by his teacher, which really affected his interests and attraction towards studies. That was an era, in which the teacher was an important person in one's life, next to Parents and Elders of the family. The weekly test results were not encouraging to gain competence to appear for the qualifying examinations - Junior Cambridge, which had a high standard. Young Sampanthar wanted to leave off, because of his supposed weakness in Arithmetic. But to his luck, and to illuminate his path of future, his kind uncle Late Mr. Velupillay

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ramanathan, a Government officer, staying close to his house, and who finally retired from Survey Office, Singapore, assisted him in arithmetic, pointing out clear methods and encouraged him to master Arithmetic, and young Sampanthar mastered Arithmetic to such an extent, in quick time, that he gained appreciation from his teacher by getting the highest marks in the class to the surprise of his classmates. This guidance by his uncle made him to continue his studies to qualify as a fully fledged doctor and surgeon

Life had taught Sampanthan, that kindness and patience, if generated by some one at a critical point in one's life, all obstructions and impediments would disappear. His difficulty with Arithmetic, and his mastering it under the kind guidance of his uncle-Late Mr. Veluppillay Ramanathan, gave him the truelessons of life." This lesson, he applied to his treatment of patients, with a smiling face and patience, and brought them round to health and happiness. He was a patient doctor, as well a patient's doctor.

His career spent in an out-post, away from the glamour of the city, building up the quality of the hospital he served, reveals the deeper man in Sampanthar. He lived up to the great traditions of the healing profession serving the rich and the poor alike, bringing relief to them as physician and surgeon. In this era of Specialists and dividing disciplines of study, a man during his average life span has to seek treatment from the various specialists; whereas Dr. Sampanthan treated the Peninsular folk, in a fitful manner, as physician and surgeon, bringing out the rich cultural traditions of people of serving in simplicity.

His passing away marks the passing away of an era, a slower, richer era, in which men worked in earnestness and did not mind the simple surroundings despite receiving education in Malaysia and the United Kingdom. They did not toture the idiom of simple living in a futile pursuit of success. Success, is to live one's life, in beauty and simplicity, avoiding the encroachment of artificial values taking up one's life, especially in the name of profession. Dr. Sampanthan has earned his rest. His skills and kindness

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

will not not be forgotten. A skillful healer has to direct society by serving from his position of vantage. Dr Sampanthar can rest in assurance, that he had amply accomplished this in his immense career as **HEALER OF PEOPLE**, and as **"A DOCTOR OF ALL SEASONS"**.

By: **A. Arasaratnam**

*The secret of success behind all men of achievement, lies in the faculty of applying their intellect in all their activities, without being misled by any surging emotions or feelings. The secret of success in life lies in keeping the head above the storms of the heart.*

**Swami Chinmayananda**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈடு செய்ய இயலாத பேரிழப்பு

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று."

வைத்திய கலாநிதி நா.தி. சம்பந்தன் அவர்கள் காரைநகரில் புகழ் பூத்த மரபில் தோன்றித் தான் வாழ்நாள் முழுவதும் புகழொடு வாழ்ந்து புகழொடு மறைந்த பெருமகன் ஆவார். வைத்திய சேவையின் உள்ளார்ந்த பண்பியல்புகளில் ஒன்றாக அமைவது பொதுநலன் பேணுதல் ஆகும். ஆயின் இப்பண்பியல்பை நடைமுறையில் பிரயோகிப்பவர்கள் மிகச்சிலரேயாவர். பணத்திற்கும் பதவிக்கும் கொடுக்கப்படும் முக்கியத்துவம் பொதுநலன் பேணும் பண்பியல்பிலும் பார்க்க மேலோங்கி இருப்பதைக் கண்கூடாகக் காணக்கூடியதாகவுள்ளது. அத்தகையதொருவுலகில் வெளிநாடு சென்று பணிபுரிய வசதிகளும் வாய்ப்புக்களும் இருந்தும் பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் சொர்க்க வாழ்வை விட மேலானது எனத் தன்னாட்டு மக்களுக்காகப் பணிபுரியும் பெருவிருப்புடன் யாழ்ப்பாணத்திலேயே நிரந்தரமாகத் தங்கி நேர்மையும் தியாக மனப்பான்மையும் கொண்டு வைத்தி பணி புரிந்தார்.

இவர் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் தனது வைத்தியப்பணியை ஆரம்பித்துப் பின்னர் அவ் வைத்தியசாலையின் உயிர் நாடியாகவும் திகழ்ந்தார். சத்திர சிகிச்சை நிபுணராகப் பட்டம் பெற்ற இவர் பல துணை மருத்துவத் துறைகளிலும் கைதேர்ந்து விளங்கினார். இவரது சேவையைப் பெற்றுப் பயனடைந்தோர் அநேகர்.

தன்னை நாடி வந்தவர்களுக்குக் கால நேரம், ஊனுறக்கம் என்பவற்றைப் பொருட்படுத்தாது இன்முகத்துடன் தனது பணியைத் தந்துதவினார். பணத்தைப் பெரிதென மதிக்காது மானிடவர்க்கத்தின் உயிர்காக்கும் நற்பணியைத் தன்னால் இயன்ற வரை மட்டுமன்றித் தன் உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த வேளையிலும் நல்கிய வள்ளலாவார். அவரது பெயர் யாழ் குடா நாடெங்கனும் ஒவ்வோர் இல்லங்களிலும் பரிச்சயமானதொன்றாக விளங்கியதே அவரது தன்னலமற்ற சேவைக்கு நல்லதொரு சான்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ வருடங்களுக்கு ஒரு முறை இறைவனால் மக்களுக்குச் சேவை புரியவென அனுப்பப்படும் மேன்மக்கள் வரிசையில் இவர் தனது சிறப்பான சேவையால் இடம்பெற்று விட்டார் எனின் அதில் மிகையேதுமில்லை. இவர் தனது சிறப்பான சேவையால் புகழ் பெற்றார் என்பதை விட, இவரது சேவையால் யாழ்ப்பாண மண் புகழ் பெற்று விட்டது என்பதே பொருத்தமானதாகும்.

இவரது மறைவு மருத்துவ உலகிற்கும் மானிட சமூகத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். ஆயின் அவரது வாழ்வும் மனித நேயம் நிறைந்த சேவையும் இன்றைய இளஞ் சந்ததியினருக்கும் நல்லதொரு எடுத்துக்காட்டாக அமையும் என்பது திண்ணம்.

"பிறந்தவர் அனைவரும் இறப்பது இயல்பே" என்பதற்கேற்ப இவரது ஊனுடல் அழிந்தாலும் அவரது புகழ் வாழ்வு அழியாத அமரத்துவம் பெற்று விட்டது."

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வா
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்."

NIRANJINI VIVEKANANTHAN /L.L. B (Hons) M.Phil
Attorney-at-Law,

குடும்பம் ஒரு மரத்தைப் போன்றது.
அதற்கு வேர் மனைவி;
அடிமரம் கணவன்;
கிளைகள் மக்கள்;
இலைகள் அன்பு;
மலர்கள் கருணை;
பழங்கள் தருமம்.

பறவைகளுக்கும் மனிதர்களுக்கும் நிழல் தந்து மரம் உறைவிடமாக உதவுவது போல இல்லறத்தான் எப்போதும் பிறருக்கு உதவியாக இருக்க வேண்டும். மனத்தாலும், வாக்காலும், செயலாலும், உடலாலும் பிறர்க்கு நன்மை செய்ய வேண்டும்.

– கிருபானந்தவாரியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## DR. SAMPANTHAN 'A MAN OF HOPE AND FORWARD LOOKING MIND EVEN TO THE LAST'

**"The memory of what has been**
**And never more will be"**
**- Wordsworth**

Thirugnana Sampanthan born on 19th May 1916 in Taiping. Malaysia, was the eldest in a family of six children. After his secondary education at St. George's school in Taiping, he came to Ceylon, studied at St. Thomas College Mt. Lavinia, the University College and the Medical College Colombo. He obtained his MBBS in 1943 and his FRCS in 1946. After his MBBS, he worked for a time in Kandy with the Government Medical Service. It was then that he decided to return to Jaffna and serve his people thereby giving up a lucrative medical practice to one of lifelong dedication and service. In December 1945, he joined the Co-operative Hospital Moolai and worked with Dr. Chako. In 1955 Dr. Sampanthan became the Medical Superintendent of the hospital and worked till December 1975. He married Saratha in 1945 and has two sons Subaschandran and Nagalingam.

I first met Sampanthan in December 1953. I was then teaching at Jaffna College, Vaddukoddai. Sam, as be was affectionately called, had many friends at Vaddukoddai and my first impression of him as a friendly and generous person with a sense of humour and an able conversationist remained with me to the end. Since then, over a period of fourty three years I have been fortunate to enjoy and savour his friendship which I consider as a gift. Our friendship extended to our families and the several long conversations into late evenings and the journeys to the interrior of the Vanni, Koneswaram, Wilpattu and the hill country comented our friendship. Sam remanted always a lovely person, a humanitarian so thoughtful of others and so completely selfless.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sampanthan was a visionary at heart. Throughout his life, he was motivated by the vision of service, of providing excellent medical facilities at affordable cost to the common man. This precisely was what the Cooperative Hospital under his direction provided. He displayed exceptional energy and enthusiasm as physican, surgeon and administrator built up the village hospital with ten beds to one of one hundred and twenty beds, a fine surgical theatre, an up - to - date labour room and a modern well equipped intensive care unit. He brought together a team of dedicated doctors supported by a team of hardworking nurses and administrators. Not content with providing medical services at the hospital, he organised an extension service to Jaffan Town where doctors from the Cooperative Hospital were available for consultation. He also provided for the availability of Specialist services at the hospital. He continued his membership with the Jaffna clinical Society. In recognition of his services he was awarded the U. S. State Department Leaders and Scholars Grant in 1960 to visit the U.S. medical institutions and observe medical practices.

Sampanthan retired from Moolai in December 1975 and came to live in Jaffna. He set up a successful medical practice in the town. Although much sought after, he gave up active medical practice in 1985 due mainly to failing eyesight. However his opinion was still sought after by patients and friends who came to him at his residence at 32, Palay Road, Kondavil. He continued to serve his people till the condition of his eyes worsened and despite treatment eventually lost the use of both his eyes. Mentally alert and physically well he continued a somewhat restricted life enjoying friends and patients who dropped in for a visit.

Sampanthan had his share of adversity as well. The decade 1985-1995 was a period of immense political instability in the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

North resulting in increased military activity and violence. In 1987 his brother Jeyaseelan with his wife and son died under tragic circumstances from IPKF fire. A few weeks later Sampanthan's own house was destroyed. He bore these personal tribulations with dignity and fortitude. Kierkegaard once commented that "when a man, particularly in adversity, proves himself to have been beautifully constructed, like some fine old instalment, so that with each new adversity not only are the strings unharmed but new strings added, that is a sign that the grace of God is upon him". On the ruins of his house he built a new one and continued to live till October 1995 when with the impending military invasion of Jaffna he too had to abandon his residence in the great 'exodus' of October 1995. In a subsequent letter from Colombo, be captured the pain and the agony of leaving his home which he loved so much. 'Life in the North is just unbearable because of intense shelling' he wrote. 'We fled Kondavil with only the clothes we were wearing on the 18th October'.

Severely hundicapped, without sight but with the help of his caring wife Saratha and friends he lived for a time at Karaveddy and after a prolonged and hazardous journey he and his wife arrived in Colombo. In the deepening twilight of his life he wrote again, his last from Colombo with a sense of cute nostalgia "how wonderful it would be, if we all could get back to Kondavil and home". Sadly this was not to be. The twilight deepened into darkness and Sampanthan passed away after a brief illness on 2nd August, 1996.

Sampanthan will be missed not only by his family but his patients and friends as well. To many he brought health and hope. He was a generous friend and a man of hope to the very end. His was a beautiful life and those who knew him will continue to cherish his memory. We thank God for his life. 'To live in the hearts of those left behind is not to die'.

**R. S. Thambiah**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வாழ்வு அநித்தியம்
# திருமந்திர விளக்கம்

உலகில் வாழும் சீவராசிகளை இரு கூறாக உடல்வேறு, உயிர்வேறாகப் படைத்திருப்பதைக் கீழ்க்காணும் திருமந்திரம் விளக்குகின்றது.

123 அத்தன் அமைத்த உடல் இருகூறினிற்
சுத்தம் தாகிய சூக்குமம் சொல்லிடிற்
சத்தம் பரிசம் ரூபம் ரசகந்தம்
புத்தி மனம் ஆங்காரம் புரியட்ட காயமே.

சடப்பொருளான உடல் அழிந்து அற்றுப்போகும் தன்மை உடையது. சூக்குமப் பொருளான உயிர் அழியாத மெய்ப்பொருள். தாயின் கருவில் மிதித்த இறைவனின் கமலப் பாதத்திலிருந்து எழுந்த ஆத்மா எனப்படும். உயிரே உடம்பைப் படைத்துக், காத்து, வளர்த்து அழிக்கும் மெய்ப்பொருள்.

163 முட்டை பிறந்தது முன்னூறு நாளினிலே
இட்டது தானில்லை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண்டு ஆண்டினிற்
கெட்டது எழுபதில் கேட்டு அறிவீரே.

உயிரானது தான் முற்பிறப்பில் செய்த வினைப்பயன்படி ஒரு தாயின் கருவில் விழுந்து பத்துமாத காலத்தில் ஓர் உடம் பைப் படைத்து உலகில் பிறக்கும். உயிரை ஏழைகளான நாம் உண்டாக்கி இடவில்லை. பன்னிரண்டு ஆண்டில் ஐம்புலன்களால் விளையும், ஆசைகள் எல்லாம் பர்ணமிக்கும். எழுபதாம் வயதில் ஆசைகளெல்லாம் அற்று அழிந்து விடுவர். பைபிளிலும், (Bible) Life span of mans is three score and ten என்று கூறுகிறது. எழுபது ஆண்டுகள் 3X20+10 என்று திருமந்திரம் கூறினதையே சொல்லுகிறது.

எமது உடம்புள் இயங்கி நடமாடச்செய்யும் உயிர், குறித்த காலத்தில் உடம்பை விட்டு விலகிவிடும். அதன்பின் உடம்பை மண்ணுக்குள் தாட்டு அல்லது எரித்து விடுவார்கள். பட்டினத்தார் கீழ்க்காணும் பாடலால் விளக்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு விடப்போகுது உயிர் விட்டுவிட்டால்
சுட்டு விடப்போகிறார் சுற்றத்தார்
பட்டது பட்டு எந்நேரமும் சிவனை
ஏற்றுங்கள் போற்றுங்கள் சொன்னேன் அது வேசுகம்

சீவனைத்தான் சிவனென்று திருமந்திரமும், யோக சூத்திரமும், பகவத்கீதையும், நற்சிந்தனையும் கூறுகிறது. பிராண வாயுவை உகாரத்துக்கு ஏற்றி ஓமெனும் இறை நாமத்தை ஓதிப் போற்றி செய்யுங்கள். அதுவே இறை இன்பத்தை அளித்து சுகத்தை கொடுக்கும்.

வாழ்வு அநித்தியம் என்பதை விளக்க பின்வரும் திருமந்திரம் விரிவாக கூறுகின்றது. இந்த உடம்பின் உள்ள உயிர் எப்போ எங்களை விட்டு நீங்கும் என்று தெரியாது. திருமந்திரத்திலே கூறியபடி

போது சடக்கெனப்போகின்றது கண்டும்
வாது செய்தென்னோ மனிதர் பெறுவது
நீதியுள்ளே நின்று நின்மலன்தாள் பணிந்து
ஆதியை அன்பில் அறிய கில்லார்களே
போது = உயிர்
வாது = உலகப்பிரச்சினைகளைப் பற்றி வாதித்து என்ன பயன்
நீதி = ஆத்மா இயங்கும் சக்கரம்

நாம் எத்தனையோ பிறப்புக்களை எடுத்துக் களைத்து மேலான இம்மானுடப் பிறப்பை பெற்றிருப்பதை மாணிக்கவாசக சுவாமிகள் விளக்கமாகக் கூறுகின்றார்.

புல்லாகிப்பூடாய் புழுவாய் மரமாகி
பல் மிருகமாகிப் பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய் பேயாய்ச் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய் தேவராய்
செல்லாநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்

ஆகவே பிறப்பில் சிறந்தது மானிடப்பிறப்பு. இப்பிறப்பிலே நாம் பிறந்தபலனை அடையவேண்டும். அப்படி அடையாவிடில் கீழ்காணும் திருமந்திரம் விரிவாக கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமந்திரம்:-

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற்கரிய பிரான் அடிபேணார்
பெறுதற்கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற்கு அரிய பேறு இழந்தாரே

பிரான் அடி எல்லா உயிர்களுமாய் இயங்குகிறது. உயிர்களைக் காப்பாற்றும் சேவையே இறைவனுக்குச்செய்யும் சேவை.

உலகப்பிரசித்தி பெற்ற ஆன்மஞானி ரமணமகாரிஜியின் திருவாக்கு உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் உணர்ந்து அனுட்டியதே மானிடப்பிறப்பின் நோக்கம்.

"மனிதன் ஆனந்தத்தை நாடுவதில் தவறு ஒன்றுமில்லை. ஏனெனில் எப்பொழுதும் ஆனந்த நிலையில் இருப்பதுதான் அவனுடைய இயல்பு. ஆனால் உலகப்பொருள்களில் அந்த ஆனந்தத்தைப் பெறலாமென்று நினைப்பது தான் தவறு. அழிவற்ற ஆன்ம வஸ்துவில் மனத்தைப் பதியவைப்பதன் மூலமே நாம் நிரந்தரமான ஆனந்தத்தைப் பெறமுடியும்.

திருக்குறள்

266 தவம் செய்வார் தன் கருமம் செய்வார் – மற்றல்லார்
அவம் செய்வார் ஆசையுட்பட்டு

Dr. சம்பந்தன் இவ்வுலகில் ஆற்றியசேவை மனித குலத்துக்கும் தனது ஆன்மா ஈடேற்றத்துக்கும் திருவள்ளுவரின் மேற்காட்டிய திருக்குறளின்படி தன் கடமையை தவறாது செய்து உலகப்பிரசித்தி பெற்ற ஆன்ம ஞானி.

3, றிட்ஜ்வே பிலேஸ்
கொழும்பு 4

சி. இராமநாதன்
திருமூலர் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூளாய் ஆஸ்பத்திரியில் நீண்டகாலம் மருத்துவப் பணிபுரிந்து மக்கள் மனதில் இடம்பெற்றவர் Dr. N.T. சம்பந்தன் அவர்கள்

வாழ்க்கை வாழ்வதற்கே என்ற தத்துவத்தில் முற்று முழுதாக சுயநல நோக்கமில்லாது அரியமானுடப்பிறவி எடுத்த பெருநோக்கோடு மனிதச்சமுதாயத்திற்கு சேவையும் பணிபுரியும் தொண்டும் செய்து வாழ்ந்து மறைந்த புண்ணிய ஆத்மாக்கள் இவ்வுலகில் பலர் தோன்றியுள்ளார்கள். சமுதாயப்பணி, கல்வித்துறை, சமயத்தொண்டு, அரசியல் அரங்கு மொழியியல் மற்றும் இன்னோரன்ன பற்பல துறைகளிலும் பணிகள் பல புரிந்து இறவாப்புகழ் பெற்ற பெரியோர் களால் வானுறையும் உயர்ந்த நிலையில் வைத்துப்போற்றி என்றென்றும் கௌரவிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த வரிசையில் வைத்தியத்துறையில் யாழ்ப்பாண குடாநாட்டில் ஐம்பது வருடங்களுக்கு மேலாக "கைராசி டாக்டர்" என்று புகழ் பெற்றும், மூளாய் கூட்டுறவு ஆஸ்பத் திரியில் முப்பத்தைந்து வருடங்கள் தொடர்ந்து தன்னலமற்ற மனிதநேயத துடனும், தியாகமனப்பான்மையுடனும் அர்ப்பணிப்புடனும், சேவைபுரிந்து அமரத்துவமடைந்த டாக்டர் N.T. சம்பந்தன் அவர்களின் வைத்தியப்பணி காலத்தினால் மறக்கமுடியாத மக்கள் சேவை என்றால் மிகையாகாது."மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற ஆன்றோரின் திவ்விய கருத்துப்படி அமரர் டாக்டர் N.T. சம்பந்தன் அவர்கள் மக்கள் நோய் தீர்க்கும் மருத்துவராக நீண்டகாலம் பணிசெய்து மக்களின் இதயக் கமலங்களில் நிலைத்து வாழ்கின்ற தியாகச்சுடராக மிளிர்கின்றார்.

## சேவை ஒன்றே குறிக்கோள்

யாழ்ப்பாணத்தின் வடபகுதியில் அமைந்துள்ள மூளாய் என்னும் சிறுகிராமம் சிறப்பும் புகழும் பெற்றது. அங்குள்ள மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையினால்தான் என்று சொன்னால் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுவர். இந்த வைத்தியசாலையின் வளர்ச்சிக்கும், ஏற்றத்துக்கும் மூலகர்த்தாவாக செயல்பட்டு 30 வருடங்களுக்கு மேலாக வைத்திய கலாநிதியாகப் பணி புரிந்தவர். டாக்டர் N.T. சம்பந்தன் அவர்களை தமிழ் மக்கள் போற்றி கௌரவிக்கிறார்கள் என்பது சாலவும் பொருத்தமாகும். அன்னாரின் சீரிய மனிதப்பண்பும், உரிய மருத்துவ அணுகு முறையும், சிறந்த பராமரிப்பு முறையும், ஆறுதல் வார்த்தைகளும் நோயாளர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். டாக்டரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிவான புன்சிரிப்பு ஒன்றே போதும் நோய்வாய்ப்பட்டவர்களின் நோய் தீர்ந்து சுகம் பெறுவதற்கு என்று பலரும் சொல்லி பெருமைப்பட்டதும் உண்டு. அத்துடன் கைராசி டாக்டர் என்று விடாப்பிடியாக நோயாளர்கள் அன்னாரை குடும்ப மருத்துவராகக் கொண்டு வாழ்வில் சுகத்தையும், அமைதி, சாந்தியையும் பெற்றுள்ளார்கள். யாழ்குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சிகிச்சை பெறுவதற்காக மக்கள் இந்த கைராசி மருத்துவக் கலாநிதியைத் தேடி நாடி வந்தார்கள். அந்த நேரத்தில் மூளாய் ஆஸ்பத்திரியும் சுற்றாடலும் சிறுநகரம்போல் காட்சியளித்தது. டாக்டர் மூளாய் ஆஸ்பத்திரிக்கு வரும் அழகே தனி அழகாகும். காலையில் 7.00 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு வரும் டாக்டர் முதலில் அங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களை சென்று பார்த்து (WARD ROUND) பின்னர் நிர்வாகப் பகுதியிலுள்ள தனது பிரத்தியேக துறையில் வரிசைக்கிரமமாக நோயாளர்களைப் பார்வையிடுவர். இறைவனை தரிசித்து சுகம்பெறும் பக்தர்கள் போல், டாக்டரின் புன்முறுவலுடன் கூடிய புத்திமதியாலும் அன்புப் பராமரிபாலும் நோயாளர்கள் ஆறுதலும் அமைதியும் பெற்று சுகமடைந்துள்ளார்கள் என்பது தற்பொழுது நினைக்கும்தோறும் புல்லரிப்பை ஏற்படுத்துகின்றது. இதை அன்னாரிடம் வைத்தியம் செய்த ஒவ்வொருவரும் கண்ட அனுபவ உண்மையாகும்.

## மக்கள் உள்ளங்களை கொள்ளை கொண்டவர்

டாக்டர் N.T. சம்பந்தன் அவர்களின் தனிப்பெருமை யாதெனில் அன்னார் 30 வருடங்களுக்கு மேலாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் தொடர்ச்சியாக சேவை புரிந்ததாகும். இக்காலத்தில் படித்த கல்விமான்களும், வைத்தியகலாநிதிகள், பொறியியலாளர்கள், கணக்காளர்கள் மற்றும் ஏனைய துறையைச் சேர்ந்தவர்களும் நம் நாட்டையும் மக்களையும் மறந்து வெளிநாடு சென்று பணம் ஈட்டுவதில் குறிக்கோளாக இருக்கிறார்கள். ஆனால் அக்காலத்தில் டாக்டர் சம்பந்தன் நம்நாட்டில் தங்கியிருந்து மக்களுக்கு நீண்டகாலம் சேவை செய்துள்ளார். அத்துடன் டாக்டர் அவர்களுக்கு இங்கிலாந்து சென்று சத்திரசிகிச்சையை தன் செலவில் கற்று பட்டமும் பெற்றார். வேறு ஒருவராக இருந்தால் மருத்துவத்துறை படிப்பு முடிந்து பட்டங்கள் பெற்றவுடன் இங்கிலாந்து நாட்டில் தங்கியிருந்து கோடிக்கணக்கில் பணத்தைக் குவித்திருப்பார். ஆனால் எங்கள் டாக்டர் சம்பந்தன் அவர்கள் அந்த இருதடவைகளிலும் மூளாய் ஆஸ்பத்திரிக்கே திரும்பவும் வந்து தனது மருத்துவப்பணியை அதே சேவை மனப்பான்மையுடன் தொடர்ந்தும் மக்களுக்கு சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்தார். அன்னாரின் நீண்டகால மருத்துவப்பணி போற்றத்தக்கதும், தெய்வத்தன்மை வாய்ந்ததும், புனிதமானதும், கால வெள்ளத்தினால் அழியாத புகழ்மிக்கதும் என்று சொன்னால் சாலவும் பொருத்த முடையதாகும்.

பின்னர் யாழ்நகரில் தனியார் மருத்துவமனையில் சிலகாலம் வைத்தியசேவையை தொடர்ந்துள்ளார். இன்றும் அன்னாரின் பெயரால் "சம்பந்தன் கிளினிக்" "புதிய சம்பந்தன் வைத்திய நிலையம்" பலவும் தனியார் மருத்துவ நிலையங்களாக இயங்குவதைக் காணலாம்.

# இறவாப் புகழ் எய்தினார்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே."

புகழ் பூத்த மருத்துவக் கலாநிதி N.T. சம்பந்தன் அவர்கள், அருள்மிகு ஈழத்துச் சிதம்பரேஸ்வரன் உறைகின்ற காரைநகரை பிறந்தகப் பூமியாகக் கொண்டு மலேசியாவில் ஆரம்பக்கல்வி கற்று பின்னர் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவக்கல்லூரியில் பயின்று வைத்தியக் கலாநிதி பட்டம் பெற்றார். பின்னர் இங்கிலாந்து சென்று வைத்தியத்துறையில் விசேட மருத்துவப்பட்டங்கள் பெற்ற பெருமகனார் நீண்டகாலம் மூளாய் ஆஸ்பத்திரியில் சேவை செய்து தமிழ் மண்ணையும் மொழியையும் மக்களையும் நேசித்து பணியாற்றி பெருமை கொண்டவர். அன்னாரின் இரு புதல்வர்களில் இரண்டாவது மகனுக்கு நாகலிங்கம் என்று தனது தகப்பனாரின் பெயரை சூட்டி மகிழ்ந்த அவரின் மொழிப்பற்று நாட்டுப்பற்றை நன்கு விளக்கிக் காட்டுகிறது. இந்த இடத்தில் அமரரின் வாழ்க்கைத் துணைவியாருக்கும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் யாவ ருக்கும் ஆறுதல் வார்த்தைகள் கூறி, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதற்கு எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரம் அருள்மிகு சுந்தரேசப்பெருமானின் திருவடிகளை வணங்குகிறோம். எம்பெருமானுக்கு ஆன்மாக்களின் பிணி தீர்த்து அருள் புரிவதினால் வைத்தியநாதன் என்று பெயரும் உள்ளது. அது போல் அமரர் டாக்டர் சம்பந்தரும் மக்களின் நோய் தீர்த்து சுகம் நல்கி இன்று எம்பெருமானுடைய பாதாரவிந்தல்களை அடைந்து விட்டார்கள். அன்னாரின் ஆத்மா சாந்தி பெறுக.

ஓம் சாந்தி ..... சாந்தி ....... சாந்தி

S.R.S. தேவதாசன் B.A, Dip. Ed., Dip. H.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ உலகின் மாணிக்கம் உதிர்ந்தது

"மலர் இன்றோ நாளையோ வாடவேண்டியது தான். வாடும் வரை மணம் வீசினால்தான் மலரின் வாழ்வு வெற்றி பெறுகின்றது. மனித வாழ்வும் அது போன்றதே." கிரௌஞ்சவதத்தில் காண்டேகரின் வார்த்தைகள் இவை. அந்த வெற்றியின் நிறைவை வாழ்வில் சிலரே அடைகின்றார்கள். அத்தகைய மனித தெய்வமொன்று எம்மையெல்லாம் விம்மியழவிட்டு விரைந்துவிட்டது. கடந்த 02.08.96 அன்று கேட்கக் கூடாத அந்தச்செய்தி கேட்டது. நடக்கக்கூடாத அந்த நிகழ்வு நடந்தது. மருத்துவ உலகின் மாணிக்கமாய் ஒளிவிட்ட டாக்டர் சம்பந்தன் அவர்கள் மறைந்து விட்டார் என்பதுதான் அது. யாழ்ப்பாண மண் எத்தனையோ யோகிகளையும், மருத்துவ மேதைகளையும் கண்டிருக் கின்றது. அந்த மேதைகட்கு மேதையாய் உயர்ந்து நின்ற அந்த கம்பீர மான உருவம் காலத்தின் நிர்ப்பந்தங்களால் நம்மிடமிருந்து மறைக் கப்பட்டு விட்டது. அண்மைக்காலத்தில் நம் சமூகம் பெற்று வந்த இழப்புக்களில் இது இன்னுமொரு பாரிய இழப்பு. இதை நியதி என்று நம்மால் மறந்துவிட முடியவில்லை.

அண்டி வந்தவர்க்கெல்லாம் ஒரு தெய்வமாக அவர் விளங்கினார். நோயின் வலிகளை மறக்கும் வேத மந்திரமாக "சம்பந்தர்" என்ற நாமம் வழங்கியதை நாம் அறிவோம். அவர் நோயுற்றோரின் நம்பிக்கை நட்சத்திரம். பிணியாளர்களின் பணிக்கேயான அவர் விசுவாசமான கடமை உணர்வு அவரை அத்துணை உயர்த்திற்று. வசதிகளையும், வருமானத்தையும் மீறி அரவது 'நிறைவு' நோயாளியின் புன்முறுவலிலேயே பதிந்தது. அதுதான் அவர் வாழ்வின் திருப்தியுமானது. அரண்மனையில் கோலோச்ச வேண்டிய டாக்டர் அபலைகளின் இதயபீடங்களில் சிம்மாசனம் பெற்றார்.

"நாம் எதையாவது அவரது சித்தத்தின்படி கேட்போமானால் அவர் அதற்குச் செவி கொடுக்கிறார் என்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கின்ற தைரியம்" சத்தியவேதத்தின் வரிகளை டாக்டர் மக்கள் முன் வாழ்ந்து நிலைப்படுத்தினார். மக்கட்கு அவர் ஒரு தைரியமும் தயவுமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலாய் நாட்டிலே பிறந்து அனைத்து வசதிகளுடனும் அமைந்த வாழ்வை விட்டு, கொழும்பு வந்து சென் தோமஸ் கல்லூரியிலும், இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் படித்துப் பட்டம்பெற்று திறமையான சித்திகளையும் பெற்றும் உயர்ந்த வாழ்வை நாடாமல், அரச உத்தியோகத்தையும் தொடராமல் தன் மண்ணையும் மக்களையும் பார்க்க ஒரு சிறிய மருத்துவ மனையை நோக்கி அவரது காலடிகள் நடந்து வந்தன. கிராம த்தின் வைத்தியசாலையான அந்த நிறுவனம் அவர் வரவால் நிமிர்ந்தது நிலைத்தது. அங்கே இல்லாத சத்திரசிகிச்சை முறையை தன் சொந்தச் செலவிலேயே கற்றுவந்து மக்கட்கு வழங்கினார். மருத்துவராக,மருத்துவ நிபுணராக,சத்திர சிகிச்சை விற்பன்னராக தன் சேவையை அவர் விரிவுபடுத்தினார். ஒரு தனிமரம் தோப்பான விந்தையை மக்கள் பார்த்தார்கள். அவர் பெற்றிருந்த பட்டங்கள் அந்தநாட்களில் மிகமிக அரிதானவை. அமெரிக்கா அவரை விரும்பி அழைத்தது. விருந்தினராகப் பெருமைப்படுத்தியது. எனினும் அதில் அவர் ஈர்க்கப்படவில்லை. சின்னஞ்சிறிய அந்த மூளாய் கூட்டுறவு வைத்திய சாலையின் சாளரங்கள் ஊடே தன் மண்ணையும் மக்களையும் அவர் கருணையோடு பார்த்தார். அந்த நேசம்தான் மக்களுடன் அவரை இணைத்தது. சொகுசான அமெரிக்கா வாழ்வின் அழைப்புக்கூட ஒரு தூசானது. அந்த இளைய இலட்சிய உள்ளம் கம்பீரமாக நிமிர்ந்து நின்றது. தன் சகாக்களுடைய ஊதியங்களை தனக்கு மேலே உயர்த்தி தன் ஊதியத்தினை அளவிட்டுக் குறுக்கிக் கொண்ட மனித தெய்வமாக அங்கு விளங்கினார். ஆச்சரியமான அதிசயமான செய்தி இது டாக்டரின் இந்த மனிதாபினமானம் வானம்வரை உயர்ந்தது.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற தமிழ் மேதையின் தத்துவத்திற்கு இலக்கணம் தந்தது டாக்டரின் வாழ்வு. எத்தனை உயிர்கள் மரணத்தின் விளிம்பில் இருந்து அவரால் மீட்டுவரப்பட்டன.எத்தனை கரங்கள் அவரை நோக்கி கூம்பி நின்றன. எத்தனையோ பேர் நன்றி சொல்ல முடியாமல் நாக்குழறினார்கள. கண்கள் குளமாக நின்றார்கள. ஏழையென்றும், வசதிபெற்றவன் என்றும் அந்த இதயம் கேட்டதில்லை. எந்த வர்க்க உணர்வும் அவரை மயக்கியதில்லை. ஆண்டவனின் சந்நிதானம் போன்று இந்த டாக்டரின் வாயில் கதவுகளும் பிணியாளர்கட்கான பேரின்ப நுழைவாயிலாக நீண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும் ஆண்டவன் சோதனைகட்கு அப்பெருந்தகை இலக்கானர். அனைவர் முகங்களையும் கருணையோடு பார்த்த அந்தக்கண்கள் பறிக்கப்பட்டுவிட்டன. இறைவன் இந்த விபரீதமான விளையாட்டை ஏனோ செய்தான். ஆயினும் அவர் துவண்டு விடவில்லை. அவர்தான் "ஞான" சம்பந்தன் ஆயிற்றே. சோதனைகளும், துயரங்களும் ஒரு கர்மயோகியைக் கலங்கச் செய்யமுடியவில்லை. நாடி பார்த்தே அவர்தன் கடமையைத் தொடர்ந்தார். மக்கட்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அந்த வாழ்வு மகத்துவமும் மனிதத்துவமும் மிக்கது.

அவர் இழப்பால் கலங்கிப்போனது அவர்பிறந்த மண். அவர் இன்மையால் வெறிச்சோடிப்போனது அவரது இல்லம். அவர் மறைவால் மறைந்து போனது மனித நேயம். அவர் பிரிவால் துயர் கொண்டனர் மக்கள். அவரது உதிர்வால் மருத்துவ உலகம் மதிப்பிட முடியாத மாணிக்கமொன்றை மரணத்தின் பிடியில் பறிகொடுத்து விட்டது. அந்தக் கம்பீரமான "ஞான" சம்பந்தன் நம்மிடம் மீண்டும் வருவாரா? அவர் வாழ்ந்த - நேசித்த மண்ணுக்கும், மக்கட்கும் வாழ்வு கிட்டுமா?

அவர் நல் ஆத்மா சாந்தியடைவதாக!

ஆ. அரசரத்தினம்

நீங்கள் உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கலாம்,
ஆனால் அதற்கிடையிலும் உங்கள் மனதை
இறைவன்பால் திருப்பவேண்டும் இல்லையேல்
உங்கள் வாழ்வு அனர்த்தமாய்ப் போய்விடும்.

ஒரு கையை கொண்டு உலக கிருத்தியங்களைச்
செய்யுங்கள். அடுத்த கையில் இறைவனைப் பற்றிப்
பிடித்துக் கொள்ளுங்கள், உலகக் கிருத்தியங்கள்
முற்றுப் பெற்றான பிறகு இரு கரங்களையும் கொண்டு
இறைவனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளலாம்.

(ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்கு விவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன்கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கு நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்றமறை யோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக் கன்பமே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்த நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத்தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தானே தென்பாண்டி நாட்டானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

1. வெய்ய வினை இரண்டும் வெந்து அகல மெய் உருகிப்
பொய்யும் பொடி ஆகாது என் செய்வேன் - செய்ய
திருஆர் பெருந்துறையான் தேன் உந்து செந்தீ
மருவாது இருந்தேன் மனத்து.

2. முன்னை வினை இரண்டும் வேர் அறுத்து முன் நின்றான்
பின்னைப் பிறப்பு அறுக்கும் பேராளன் - தென்னன்
பெருந்துறையில் மேய பெரும் கருணையாளன்
வரும் துயரம் தீர்க்கும் மருந்து.

3. செய்த பிழை அறியேன் சேவடியே கை தொழுதே
உய்யும் வகையில் உயிர்ப்பு அறியேன் - வையத்து
இருந்து உறையுள் வேல் மடுத்து என் சிந்தைனக்கே
- கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

We thank all our relatives, friends and well wishers, who visited, consoled and gave medical advice to our father during his incapacitated days at Kondavil, Point-Pedro & Colombo.

We also thank everybody who attended the funeral and sent messages of condolences and placed wreaths.

We regret our inability to thank you individually.

- Mrs.Sampanthan & Family

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org